# வடக்கு-கிழக்கில் 1000 படையினர் நிரந்தர ஊனம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் புலிகளுடனான மோதலில் காயமடையும் படையினரில் மூன்றில் ஒருவர் நிரந்தரமாய் ஊனமடைவதாக இராணுவ தலைமைப் பதி ஒருவர் கவலையடைந்துள்ளார். இது பற்றி அவர் 'சண்டே டைம்ஸு'க்களித்த பேட்டியில்;

கடந்த ஒருவருட யுத்தத்

(4ம் பக்கம் பார்க்க)


விலை ரூபா 4-50

ஈழநாடு

THE EELANADU

NATIONAL TAMIL DAILY

மலர் 33 ஆனி 13 இல்லாத்து 14 இதழ் 136

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 27-06-1991


## புலிகள் தாக்குதல் இராணுவம் பின்வாங்கியது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நகரப்பகுதியில் நிலைகொண்டுள்ள ஸ்ரீலங்காப் படையினர் நேற்றுக்காலை 7-45 மணியளவில் கிலாவத்தையை நோக்கி அவசரமாக னங்களின் சகிதம் முன்னேற முற்பட்டபோது விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல் தொடுத்தனர்.

விடுதலைப் புலிகளின் கடும்

(4ம் பக்கம் பார்க்க)

## மத்தியஸ்த முயற்சிக்கு ஆஸி. மீண்டும் விருப்பம்

(கன்பரா)

இலங்கை இனப்பிரச்சனை தீர்வுக்கு மத்தியஸ்தம் வகிக்க ஆஸ்திரேலியா மீண்டும் விருப்பம் தெரிவித்துள்ளது. இது குறித்து கடிதம் ஒன்றையும் இலங்கைக்கு அனுப்பியுள்ளது.

இலங்கையின் நிலைமை

(4-ம் பக்கம் பார்க்க)

# ★ கொழும்பில் எங்கும் பீதி

# தற்கொலைப்படை தாக்குதலைத் தடுக்க வெளிநாட்டு ஆலோசனை

(கொழும்பு)

நாட்டின் முக்கிய பகுதிகளில் மேலும் தற்கொலைப் படைத் தாக்குதல்கள் ஏற்படுவதை உடனடியாக தடுத்துநிறுத்துவதற்கான உத்திகளை பெறும்நோக்கில் அரசு தரப்பு சில வெளிநாடுகளுடன் தொடர்புகொள்ளவுள்ளதாக கொழும்புச் செய்திகள் கூறுகின்றன.

கடந்த சில மாதங்களில் இலங்கையிலும், இந்தியாவிலும் இடம்பெற்ற 3 தற்கொலைப் படைத் தாக்குதல்கள் அரசு தரப்பிலும் படையினர் மத்தியிலும் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதாம்.

மேற்படி 3 தாக்குதல்களும் வெற்றியளித்துள்ளதாகவும், இத்தாக்குதல்மேலும்தொடராமலிருப்பதைத் தடுக்க முக்கிய சில நாடுகளுடன் தொடர்பு கொண்டு உரிய ஆலோசனையைப் பெறுமாறு அரசுக்கு

(4ம் பக்கம் பார்க்க)

## குண்டு தயாரித்த வீடு சுற்றி வளைப்பு

(கொழும்பு)

கொழும்பு கூட்டுப் படைத் தலைமையக குண்டுத் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட வெடிகுண்டு தயாரிக்கப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் வீடு ஒன்றை இராணுவத்தினர்

(4-ம் பக்கம் பார்க்க)

## கொழும்பு தாக்குதலுக்கு ஜனாதிபதியே காரணம்

(கொழும்பு)

"ஜனாதிபதி பிரேமதாசா தலைமையிலான ஐ.தே.கட்சி அரசு கொழும்பு நகரில் போதிய பாதுகாப்பு வழங்கத் தவறியமையினாலேயே குண்டு வெடிப்புச் சம்பவங்கள் கொழும்பில் தொடர்கின்றன".

இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சித் தலைவியும், எதிர்க்

(4-ம் பக்கம் பார்க்க)

## இலங்கை தூதரகங்களுக்கு வெளிநாடுகளில் பாதுகாப்பு

(லண்டன்)

வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரகங்களுக்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை அரசின் வேண்டுகோளை ஏற்றே இவ்வித பாதுகாப்பு பல நாடுகளிலுமுள்ள இலங்கைத் தூதரகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாம்.

(4-ம் பக்கம் பார்க்க)

## ஷெல் தாக்குதல்: மூவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

பலாலியிலிருந்து படையினர் ஏழாலைப் பகுதியை நோக்கி ஷெல் பிரயோகத்தை மேற்கொண்டதில்

(4-ம் பக்கம் பார்க்க)

## குண்டு வெடிப்புகளையடுத்து இலங்கை-இந்தியாவில் பீதி!

(சென்னை)

ஸ்ரீ பெரம்புதூரிலும், கொழும்பிலும் இடம்பெற்ற தற்கொலைப்படைத்தாக்குதல் போன்று தமிழகத்திலும் மேலும் குண்டுத்தாக்குதல் நிகழலாமென 'இந்திய மத்திய புலனாய்வுத்துறை' பெரும் அச்சம் தெரிவித்துள்ளது.

இதேபோன்ற எச்சரிக்கையை இலங்கைப் பொலிசாரும் விடுத்துள்ளனர். மேலும்

(4ம் பக்கம் பார்க்க)

## ஜேர்மன் வானொலி திருமலையிலிருந்து இயங்கும்

(திருமலை)

திருமலையில் ஜேர்மன் வானொலியான 'ரேடியோ டொச் வெல்' தனது சேவையை ஆரம்பிக்க இலங்கை அரசு அனுமதியளித்துள்ளது.

மேற்படி வானொலி திருமலையிலிருந்து தெற்கு, கிழக்கு ஆசியாவிற்கான சேவையை நடாத்தவுள்ளது. 'வொய்ஸ் ஒவ் அமெரிக்கா' இங்கிருந்து இயங்க ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ளது.

திருமலையில் பல வெளிநாட்டு முதலீட்டுக்கும் அரசு அனுமதி வழங்கியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (சி)

## விசாரணைக் குழு இன்று கொக்கட்டிச்சோலை விஜயம்

(கொழும்பு)

கொக்கட்டிச்சோலைப் படுகொலை தொடர்பாக விசாரணைசெய்வதற்கு நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு இன்று வியாழக்கிழமை மட்டக்களப்புக்கு விஜயஞ்செய்யும்;

மூன்று பேர் கொண்ட இக்குழு மட்டக்களப்புக்குச் சென்று, அங்கிருந்து விசேட ஹெலிகொப்டர் மூலம் கொக்கட்டிச்சோலை, மகிழடித்தீவு, முதலைக்குடா ஆகிய கிராமங்களுக்கு விஜயஞ்செய்யும்;

சம்பந்தப்பட்ட கிராமங்களைச் சேர்ந்த மக்களை நேரடி

(4ம் பக்கம் பார்க்க)

## சுவிஸ் நாட்டில் தமிழ் இளைஞர்கள் மோதல்

(சூரிச்)

சுவிஸ்சர்லாந்தின் சூரிச் நகரின் அண்மையில் தமிழ் இளைஞர்களிடையே மோதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது சூரிச்சில் இடம்பெற்ற ஊர்வலம் ஒன்றிலேயே இவர்

(4-ம் பக்கம் பார்க்க)

## இளம் ஆசிரியை வெட்டிக் கொலை

(பருத்தித்துறை)

சோரன்பற்று- தர்மக்கேணி என்னுமிடத்தில் இளம் ஆசிரியை ஒருவர் பாடசாலை முடிந்து சைக்கிளில் வீடு திரும்புகையில் கழுத்து வெட்டப்பட்டு கொலை செய்யப்பட்

(4-ம் பக்கம் பார்க்க)

## ஆறு தமிழ் இளைஞர்கள் டென்மார்க்கில் கைது

(கொப்பனேகன்)

டென்மார்க்கில் தமிழ் அகதிகளிடம் பணம் பறித்ததாக ஆறு இலங்கைத் தமிழ் இளைஞர்கள் அந்நாட்டு பொலிஸாரால் பிடிக்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் அங்குள்ள தமிழ் அகதிகளை மிரட்டி பணம் பறித்ததாக தெரிவிக்கப்

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### நிலவே நீ மயங்காதே

ரமணிச்சந்திரன் நாவலைப் படித்த மனத்திருப்தியை ஏற்படுத்தும் சமூக நாவல். தவிக்கும் பெண்மனம், தடுமாறும் பெண்மனம் செல்வதறியாது திகைக்கும் பெண் மனங்களே இந்நாவலின் சந்தியுங்கள். விற்பனையாகின்றது. [சி-4914]

### வெளிவந்துவிட்டது

வரலாறும் சமூகக் கல்வியும் ஆண்டு 10 துரித மீட்டலுக்கான வினா விடை ஆக்கம்: க. சந்திரசேகரம். (ஆண்டு 11 மாணவர்களுக்கும் பயன்படக்கூடியது. (எ 1400)

### தவறிவிட்டது

வீரபத்திரர் கோவிலடி, கச்சாய் வீதி சாவகச்சேரியைச் சேர்ந்த முருகன் தப்பு என்பவரின் தேசிய அடையாள அட்டை, ஆஸ்பத்திரி அடையாள அட்டை ஆகியன மணிப் பேர்சுடன் சாவகச்சேரியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் இவற்றை ஒப்படைக்குமாறு வேண்டுகிறோம். (சி 4908)

தெல்லிப்பழை கிழக்கு பாலகிருஷ்ணன் பாலச்சந்திரன் இலக்கம் 620900753V, சகுந்தலாதேவி இலக்கம் 598251797V ஆகிய இருவரின் அடையாள அட்டைகளும், பணமும், திறப்பும், பேர்சுடன் தெல்லிப்பழைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடைப்பட்ட காங்கேசன்துறை றோட்டில் தவறிவிட்டது. இதனைக் கண்டு எடுத்தவர்கள் சண்முகராஜா 132, கஸ்தூரியார் றோட்டில் ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் கொடுக்கப்படும். (சி-4912)

### புலமைப் பரிசில் பரீட்சை (ஆண்டு 4, 5)

ஆண்டு 5 புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை (ஏழாவது) 30-06-91 ஞாயிறு மு. ப. 8 00 / மு. ப. 10-30 / பி. ப. 1-00 நடைபெறும் புலமைப்பரிசில் Paper Class ஆரம்பமாகியுள்ளன. 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் பி. ப. 4. 00 மணிக்கு மக்கள்வைத்தியசாலை முன்பாக கொக்குவில் மேதினில் நடைபெறும். ஆண்டு 4 பரீட்சை 07-07-91 ஞாயிறு மு. ப. 8.00 / பி. ப. 1.00 நடைபெறும். (சி-4906)

---

யூகோஸ்லாவியாவில்

# சமஷ்டி குடியரசு நாடுகள் சுதந்திர பிரகடனம்!

(பெல்கிறேட்)

யூகோஸ்லாவியாவின் சமஷ்டிக் குடியரசுகளான கோர்ஷியாவும் ஸ்லோவேனியாவும் தங்களது சுதந்திரத்தைப் பிரகடனப்படுத்தியுள்ளன.

சுதந்திரமான சுயாட்சியுள்ள நாடாகவிருக்கவும், நாட்டின் சமஷ்டி அமைப்பில் இருந்து விலகவும் கோர்ஷியா பாராளுமன்றம் நேற்றுமுன்தினம் பேராதரவுடன் வாக்களித்தது.

இதுபோன்ற பிரகடனத்தைச் சிலவோனியப் பாராளுமன்றமும் நேற்று நிறைவேற்றியது.

யூகோஸ்லாவிய அரசு, இம்மாநில அரசுகளுக்கெதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரித்துள்ளது.

இதேவேளை இவ்விரு நாடுகளின் சுதந்திரப் பிரகடனத்தை அங்கீகரிக்குமாறு அமெரிக்காவை இச்சமஷ்டிக் குடியரசுகள் நாடியபோதும், அமெரிக்கா அக்கோரிக்கையினை நிராகரித்துள்ளது. (பூ)

---

# பரந்தன் விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் வயல் விழா

(மானிப்பாய்)

பரந்தன் விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் யூலை மாதம் 1ம் திகதி காலை 9-00 மணிக்கு வயல்விழா நடைபெறவுள்ளது.

இதன் முக்கிய நோக்கம் விவசாய திணைக்களத்தைச் சேர்ந்த ஊழியர்களுக்கும் மற்றும் அரச சார்பற்ற நிறுவன ஊழியர்களுக்கும் பொதுமக்களுக்கும் மேற்படி நிலையத்தில் மேற்கொள்ளப்படுகின்ற பயிர் ஆராய்ச்சி சம்பந்தமான விடயங்களையும் மற்றும் நெற்பயிர்ச்செய்கை செய்யப்படாத காலங்களில் வயலில் எவ்வண்ணம் உப உணவுப் பயிர்களின் உற்பத்தியை வைக்குவிக்கலாம் என்பதேயாகும். [71]

---

### பனைவள ஆய்வரங்கும் கண் காட்சியும்

(யாழ்ப்பாணம்)

யாழ் விஞ்ஞான மன்றமும் பனை தென்னைவள அபிவிருத்தி ஒன்றியமும் இணைந்து யாழ் பல்கலைக்கழகத்தில் இம்மாதம் 29, 30ம் திகதிகளில் பனை ஆய்வரங்கையும், கண்காட்சியையும் நடாத்தவுள்ளது.

---

# சைக்கிள் திருடியவர் விடுதலைப் புலிகளால் கைது

(நாவற்குழி)

சாவகச்சேரி டச்சுவீதியில் கடந்தமாதம் 26ம் திகதி திருடப்பட்ட சைக்கிள் ஒன்று கடந்த 17ம் திகதி யாழ் நகரிலுள்ள ஒரு கல்லூரியில் கண்டு பிடிக்கப்பட்டது.

சைக்கிள் உரிமையாளரான செல்வி மீரா தர்மேந்திரன் களவுபோன தனது சைக்கிளை அடையாளம் காட்டினார்.

இதனை தொடர்ந்து சைக்கிளை சாவகச்சேரியில் களவாடி வந்து திருநெல்வேலியில் விற்றவர் விடுதலைப்புலிகளால் கைதுசெய்யப்பட்டார். (107)

---

### பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு உள்ளூராட்சிச்சேவை ஓய்வூதியர் நலன் பரிச்சங்கத்தின் இரண்டாவது பொதுக்கூட்டம் யாழ். வைத்தீஸ்வரா வித்தியாலய மண்டபத்தில் 30ம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9-30 மணிக்கு நடைபெறும்.

---

யாழ். மாவட்ட

இறைச்சிக் கடை வியாபாரிகள் சங்கம்

### பொதுக்கூட்டம்

மேற்படி எமது சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் 28 - 6 - 91 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள அடைக்கலநாயகி தேவாலய, யாழ்/புனித மரியாள் மகா வித்தியாலயத்தில், தலைவர் ம. கு. வின்சன் தலைமையில் நடைபெறும். அனைவரும் தவறாது சமுகம் கொடுக்கவும்.

க. சி. கிருஷ்ணன் (செயலாளர்)

(சி 4913)

---

க. பொ. த. உயர்தர

# விடைத்தாள் திருத்தவேலை 29ல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கல்விப் பொதுத் தராதர உயர்தர விசேட பரீட்சை 1990க்கான விடைத்தாள் திருத்தும் வேலைகள் இம்மாதம் 29ம் திகதி கொழும்பில் ஆரம்பிக்கப்படுமென்று யாழ். கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார். (4-ம் பக்கம் பார்க்க)

---

# அதிபர்கள் சேவை விபரம் சேகரிப்பு

(வட்டுக்கோட்டை)

1973-ஆம் ஆண்டுக்கு முன்னர் முதலாந்தர அதிபர் பளாக (முன்னைய மூன்றும் தரம்) நிரந்தர நியமனம் பெற்றுத் தொடர்ந்து சேவையாற்றிவரும் அதிபர்கள் கல்வி நிர்வாக சேவையின் மூன்றும் தரத்திற்குப் பதவி உயர்த்தப்படவுள்ளனர்.

இதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை கல்விச்சேவை ஆணைக்குழு மேற்கொண்டு வருகிறது. இத்தகைய அதிபர்களது சேவை விபரங்கள் கோட்டக் கல்வி அலுவலகங்களுக்கூடாகச் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

யாழ். மாவட்டத்தில் முன்னைய மூன்றும் தரம். தற்போதைய முதலாந்தர நிரந்தர அதிபர்கள் மிகக் குறைவானவர்களே தொடர்ந்து சேவையாற்றி வருவதால் கல்வி நிர்வாக சேவையின் மூன்றும் தரத்திற்கு பதவி உயர்த்தப்படுவோரின் தொகையும் மிகக் குறைவாகவே இருக்குமென நம்பப்படுகிறது. (189)

---

### சுகாதார கருத்தரங்கு

(உடுவில்)

உடுவில் பொதுச் சுகாதார பரிசோதகர், குடும்பநல சேவையாளர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட சுகாதார கருத்தரங்கு ஒன்று உடுவில் கிழக்கு கற்பகப்பிள்ளையார் கோவிலடி அண்ணா சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

கிராம சுகாதார பொறுப்பாளர் திரு. வை. மகாராசா தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில், உடுவில் பகுதி சிரேஷ்ட பொதுச்சுகாதார பரிசோதகர் திரு. வி. கே. கிங்ஸராசா, குடும்பநல சேவையாளர்கள் திருமதி பாலசிங்கம், செல்வி வசந்தாதேவி, திருமதி சுமலா அல்பிரட் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

இணுவில் பதிவு வைத்திய அதிகாரி திருமதி ஜானகி நித்தியானந்தன், நோய்களின் தாக்கம்பற்றி ஆய்வுரை ஒன்றை நிகழ்த்தினார். (109)

---

### யாருடையது?

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை ஆறுகால் மடத்தடிக்கு அண்மையில் மாகியப்பிட்டி சண்டிலிப்பாயைச் சேர்ந்த கன்னியா கமலதாஸ் என்பவரது (652694985 V) இலக்க அடையாள அட்டையும், பற்றுச்சீட்டுகள், தபால்கள் அடங்கிய பேர்சும் ஆனைக்கோட்டை கூழாவடி மேற்கைச் சேர்ந்த ஞா. மரியசீலன் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் பெற்றுக்கொள்ளவும்.

---

### திருட்டு

(உடுவில்)

உடுவில் ஸ்ரீ சிவஞானப் பிள்ளையார் ஆலயத்தில் திருடர்கள் கோவில் கதவுகளைப் பெயர்த்து உட்சென்று மூலமூர்த்தியை புரட்டியுள்ளனர். அங்கிருந்த பெறுமதியான பொருட்களையும் கற்பூரங்களையும் எடுத்துச்சென்றுள்ளனர். (109)

---

ஆறு மாதத்தில் 6000 கிலோ

# பனம்வெல்லம் உற்பத்தியில் சாதனை

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை தொகுதி தெங்குப் பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் பனம் வெல்லம் உற்பத்தியில் சாதனை நிகழ்த்தியுள்ளது. இவ்வருடம் தை மாதத்திலிருந்து இன்றுவரை 6000 கிலோ நிறையுள்ள பனம் வெல்லத்தை இச்சங்கம் உற்பத்திசெய்துள்ளது.

இச்சங்கத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட இந்தப் பனம் வெல்லத்தின் ஒரு பகுதியை சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் ஆகியன கொள்வனவு செய்துள்ளன.

இச் சங்கத்தில் பனம் சீனி உற்பத்திக்கென்று 500 போத்தல் பனம் பாணி தயாரிக்கப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாயில் செயற்பட்டுவரும் பனம் சீனித் தொழிற்சாலைக்கு வழங்குவதற்காக இந்தப் பனம் பாணி தயாரிக்கப்பட்டு வருகின்றது என்று சங்கப் பொதுமுகாமையாளர், திரு. த. செல்வராஜா தெரிவித்தார். (72)

---

### இன்று

(உடுவில்)

இணுவில் சைவ மகாஜனா மகாவித்தியாலயத்தில் இன்றும், நாளையும் கல்விக் கண்காட்சியொன்று அதிபர் திரு. எஸ். சோதிப்பெருமாள் தலைமையில் நடைபெறவுள்ளது.

மருதனார்மடம் கோட்டக் கல்வி பிரதம கல்வியதிகாரி திரு. என் தனஞ்சயன் கண்காட்சியை ஆரம்பித்து வைப்பார். (109)

---

### கலந்துரையாடல்

(நாவற்குழி)

தென்மராட்சியில் உள்ள தனியார் கல்விநிறுவன உரிமையாளர்களுக்கும் பிரத்தியேக வகுப்புகளை நடாத்துகின்ற ஆசிரியர்களுக்குமான கலந்துரையாடலொன்று நாளை 28ம் திகதி பிற்பகல் 3 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (107)

---

உ

# திருமண அழைப்பு

நிகழும் பிரஜோற்பத்தி வருடம் ஆனித்திங்கள் 17-ம் நாள் (01 - 07 - 91) திங்கட்கிழமை பகல் 11-56—1-26 வரையுள்ள சுபமுகூர்த்தத்தில்

எமது

| | |
|---|---|
| சிரேஷ்ட புத்திரன் திருநிறை செல்வன் **கைலாசநாதன்** (பேர்கன் பல்கலைக்கழகம், நோர்வே) அவர்களுக்கும் | ஏக புத்திரி திருநிறை செல்வி **யசோதினி** (ஒஸ்லோ பல்கலைக்கழகம், நோர்வே) அவர்களுக்கும் |

பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நிகழும் திருமணத்தின் போது உற்றார், உறவினர், நண்பர்கள் சமுகம்தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

| | |
|---|---|
| மு. சந்திரபால் (பொறியியலாளர்) பாரியாரும் 1, ஜோசப் ஒழுங்கை, கொழும்பு - 4 | கா. மாணிக்கவாசகர் (நூலகர், யாழ். மத்திய கல்லூரி) பாரியாரும் 154, புதுச்செட்டித்தெரு, கொழும்பு - 13 |

(சி 4910)

# புலிகளுடன் மோதி படுதோல்வியுடன்

# இந்தியராணுவபூதம் வெளியேறியது

(நேற்றைய தொடர்ச்சி)

புதிய ஜனாதிபதியாக பதவியேற்ற பிரேமதாசா, 1989 இன் ஆரம்பத்திலிருந்தே விடுதலைப் புலிகளை சமாதானப் பேச்சுக்கு வருமாறு மாறி மாறி அழைப்புகளை விடுத்தார் வடகிழக்கில் முடிவில்லாமல் தொடரும் யுத்தமும், தென்னிலங்கையில் ஜே.வி.பி.யின் கிளர்ச்சியுமாக வன்முறைச்சுவாலைகள் இலங்கைத் தீவு முழுவதிலும் பரவியிருந்தது. புலிகளுக்கு எதிரான யுத்தத்தை சாக்காக வைத்து வடகிழக்கில் இந்திய இராணுவம் நிரந்தரமாக நிலைகொண்டு விடலாம் என பிரேமதாசா அஞ்சினார். ஜே.வி.பி.யினரும் இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிரான கோஷத்தை முன்வைத்தே கிளர்ச்

கோடிபணத்தைச் செலவழித்து எத்தனையோ ஜவான்களின் உயிரைப் பலிகொடுத்து இறுதியில் வெறுங்கையுடன் எதிர்பார்த்த கைகூடாமல் அவமானப் பட்டு வெளியேறுவதை இந்திராவினால் சகித்துக் கொள்ள முடியவில்லை.

ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேற நிர்ப்பந்திக்கப் பட்டபோது சோவியத்யூனியன் கையாண்ட யுத்தியை கடைப்பிடிக்க முனைந்தது. புலிகளிடமிருந்து தனது பொம்மை ஆட்சியை காப்பாற்றும் நோக்கில் ஒரு கூலி இராணுவத்தை உருவாக்க இந்தியா முயன்றது. தமிழ்த் தேசிய இராணுவம் என்ற பெயரில் இந்த இராணுவம் அமைக்கப்பட்டது. பலவந்தமாக தமிழ் இளைஞர்களையும் மாணவர்

(விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் முத்தமிழ் விழா மலரில் வெளிவந்த தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் 'இரண்டு தசாப்தங்களும் புலிகளும்' என்ற கட்டுரை தொடர்ச்சியாக இங்கு தரப்படுகிறது.)

இவை நடத்தி வந்தார்கள்; எனவே விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்தி இந்திய இராணுவத்தை வெளியேற்றி விடவேண்டுமென பிரேமதாசா விரும்பினார்.

தமிழீழ மண்ணில் இந்திய ஆக்கிரமிப்பிற்கு முற்றுப் புள்ளி வைத்துவிட வேண்டும் என புலிகளும் விரும்பியதால் பிரேமதாசாவின் அழைப்பை ஏற்க முடிவு செய்தனர். நிபந்தனைகள் எதுவுமின்றி பேச்சுக்கள் சுமுகமாக நடைபெற்றன. இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிராக பிரேமதாசா அரசு புலிகளுடன் கைகோர்த்து நின்றமை ராஜீவ் அரசுக்கு சினத்தைக் கொடுத்தது; சிங்கள இராணுவத்திற்கு முண்டு கொடுத்து சிறிலங்கா அரசின் நலனுக்காக, இந்திய ஜவான்கள் இரத்தம் சிந்திக்கொண்டிருக்கும் வேளையில் பிரேமதாசா அரசு புலிகளை அரவணைத்து நின்றது இந்தியாவுக்கு அவமானத்தையும் ஆத்திரத்தையும் கொடுத்தது; புலிகளின் விவேகமான ராஜதந்திர காய் நகர்த்தலால் இந்திய இலங்கை உறவுகளில் பகைமை மூண்டது. இந்திய இராணுவத்தை வெளியேறுமாறு பிரேமதாசா பகிரங்கமாக அறிவித்தார். இலங்கையின் அழைப்பில் பேரில் அமைதிகாக்க வந்ததாகக் கூறி வந்த இந்திய அரசுக்கு நிலைமை சங்கடமாகியது; அவமானப்பட்டு முகத்தில் கரி பூசியபடி இந்திய இராணுவம் தமிழீழத்திலிருந்து வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டது.

எத்தனையோ திட்டங்கள் வகுத்து எத்தனையோ அரசியல் ராஜதந்திர நாடகங்களை அரங்கேற்றி, எத்தனையோ

களையும் வேட்டையாடிப் பிடித்தது. பயிற்சி அளித்து பெருந்தொகையில் நவீனரக ஆயுதங்களை வழங்கி, புலிகளுக்கு எதிராக ஒருபடை திரட்டப்பட்டது. பெருமாளின் மாகாணசபை நிர்

வாகத்திற்கு பாதுகாப்பு அரணாக இந்தப் படையை உருவாக்கியது. இந்திய இராணுவம் ஒவ்வொருமாவட்டத்திலிருந்தும் படிப்படியாக வெளியேறியது.

இந்திய இராணுவம் வெளியேறிய பிரதேசங்கள் துரித

தொரு சவாலை புலிகள் இலகுவாக வெற்றி கொண்டது. ஒடுக்கப்பட்டு வந்த தமிழ்த் தேசிய இனத்தின் நியாயபூர்வமான விடுதலைப் போராட்டத்தில் அதியாய மாகத் தலைப்பட்டதன் கசப்

## கலாநிதி அன்ரன் பாலசிங்கம்

கெதியில் புலிகள் வசம் வீழ்ந்தன. இலட்சிய உறுதியும், போர் அனுபவமும் வீரமும் மிகுந்த புலிப்படை வீரரின் மின்னல் வேகத் தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் தமிழ்த் தேசிய இராணுவம் சிதறுண்டு ஓடியது. பெரும்பான்மையானோர் ஆயுதங்களுடன் சரணடைந்தனர்; மாகாணசபை கவிழ்ந்தது. பெருமாளும் அவரது சகாக்களும் இந்தியாவில் தஞ்சம் புகுந்தனர். இந்திய அரசின் இறுதித்திட்டமும் தவிடுபொடியாகியது.

எண்பதுகளின் இறுதி ஆண்டு இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தின் வெளியேற்றத்துடனும் 'தமிழ் தேசிய இராணுவத்'தின் வீழ்ச்சியுடனும் முடிவடைந்தது. இந்திய இராணுவத் தலையீடு தோல்வியில் முடிந்ததால் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எழுந்த மிகப்பெரிய ஆபத்து நீங்கியது. இந்திய வல்லாதிக்கம் விடுத்த பெரிய

பான வரலாற்றுப் பாடத்தை இந்திய அரசு கற்றுக்கொண்டது; இந்திய இராணுவ பூதத்தை தனித்து நின்று எதிர்த்து வெற்றி கொண்டதால் உலகத்தின் தனிச்சிறந்த போராட்ட சக்தியாக புலிகள் இயக்கம் புகழைத் தேடிக்கொண்டது.

நாளை: மீண்டும் யுத்தம்

### இராணுவம் சுட்டு பெண் காயம்

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் தச்சன்காடு மினி முகாமிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் தோட்டத்திற்குச் சென்றுகொண்டிருந்த இளம் யுவதி ஒருவர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அம்பனையைச் சேர்ந்த இன்னத்துரை ஜெயாரகா [18 வயது] என்பவரே படுகாயமடைந்தவராவர் (56)

## இராசி பலன்

27-06-1991

வியாழக்கிழமை

பூரணை மு. ப. 8 48 வரை. மூலம் பி. ப 1-14 வரை. சித்தயோகம். இராகுகாலம் பகல் 1-25 முதல் 2-55 வரை. சுபநேரம் காலை 7-25 முதல் 8-55 வரை.

மேடம்: வித்தைத் தவனை, மனப்போராட்டம், பணக் குறைபாடு.

இடபம்: அதிகாரிகள் துயர், மனதில் பயம், வயிற்றில் ரோகம்.

மிதுனம்: தொழில் சிறப்பு, கற்பனை உள்ளம், குடும்ப சந்தோசம்.

கடகம்: உறவினர் வருகை, பொதுத்துறைச் சிறப்பு, புத்திரர் செலவு.

சிங்கம்: எதிர்கால சிந்தனை, காரியத்தடை, தொழில் பாதிப்பு

கன்னி: தொழில் கஷ்டம், அசாத்திய நிலை, ஆவேச உணர்வு.

துலாம்: குடும்பத்தில் இன்ப நிகழ்ச்சி, தொழில் லாபம், எதிர்பார்த்த செய்தி.

விருச்சிகம்: ஏமாற்றம், பயணங்கள் தடை, அலைச்சல் மிகுதி.

தனுசு: தொழில் சிறப்பு, பணவரவு, நண்பர்கள் உதவி.

மகரம்: எதிர்பாராத தொல்லை, வசதிக்குறைவு, குடும்ப பிரிவு.

கும்பம்: காரிய வெற்றி, அதிக முதலீடு, பணியாளர் உதவி, புகழ்

மீனம்: அறிஞர் சந்திப்பு, குடும்ப சந்தோஷம், தான தர்மம்.

: ஜோஸ்யர்

# "எமது வீரத்தை நிலைநாட்ட உயிர்த்தியாகம் செய்கின்றோம்"

\- கவிஞர் வாஞ்சிநாதன்

(யாழ்ப்பாணம்)

"சங்ககாலம் தமிழரின் பொற்காலம், பெருமைக்குரிய காலம், என்று வரலாறு கூறுகின்றது: அக்காலத்தில் போரை கற்கண்டாக கருதினான் தமிழன், தமிழ் அரசர்கள் போர் முரசு அறிவித்ததும், ஆயிரமாயிரம் தமிழர்கள் பொங்கி எழுந்து போர்க்களத்துக்குப் புறப்பட்டு எதிரிகளை மாய்த்தார்கள். அன்றைய தமிழன் வீரத்தோடு வாழ்ந்தான். கலிங்கத்துப்பரணி, புறநானூறு போன்ற பழந்தமிழ் இலக்கியங்கள் தமிழர்களின் போர்த்திறனை வெகு சிறப்பாக எடுத்துக் கூறியுள்ளன: ஆனால் அந்தப்பொற்காலம் பல நூற்றாண்டுகளாக இங்கு மறைந்து கிடந்தது; இன்று அந்த வீரக்காலம் மீண்டும் வந்துவிட்டது; சங்ககாலத்தையும் மிஞ்சிவிட்டது.... பிரபாகரனின் காலம் உலகத்தமிழரின் மறுமலர்ச்சிக் காலம்... என்றால் மிகையாகாது...."

இவ்வாறு அண்மையில் கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்த ஸ்கந்தபுரத்தில் நடைபெற்ற போர்க்காலக்கருத்தரங்கில் பிரதம பேச்சாளராக கலந்து கொண்டு உரையாற்றிய விடுதலைப்புலிகளின் கவிஞர் மு வே. யோ. வாஞ்சிநாதன் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்; "நாம் பல நூற்றாண்டுகளுக்கு முன் இழந்துவிட்ட எமது வீரத்தை, புகழை, பெருமையை, நாமிங்கே, மீண்டும் நிலைநாட்டுவதற்காக, எமது அருட்பெரும் உயிர்களைத் தியாகம் செய்து வருகின்றோம்;... சங்ககாலத்தில் கூட கரும்புலிகளின் தியாக வரலாறு இருக்கவில்லை. இன்று நம் உடலை நொடிப் பொழுதில், பொடிப்பொடியாக்கும் இளைஞர்கள் முன்னணியில் நிற்கின்றார்கள். வாழவேண்டிய இளம்பருவத்தில், இந்தக் கரும்புலிகள் தம்மையே அழித்து இம்மண்ணுக்காகவும், மக்களுக்காகவும் தியாக வரலாறுகளைப் படைத்து வருகின்றார்கள்- ஆகவேதான் தலைவர் பிரபாகரனின் காலம் உலகத் தமிழர்களின் மறுமலர்ச்சிக்காலம் ஆகும் சங்ககாலத்திலே வாழ்ந்த வீரத்தை கொண்டு பல வீர காவியங்கள் தமிழிலே எழுந்தன... எமது காலத்திலே அந்த வீரகாவியங்களை எழுத யார் இருக்கிறார்கள்...

எமது வீர வரலாறுகள் புறநானூற்றையும் கலிங்கத்துபரணியையும் விஞ்சிநிற்பனை நமது எழுத்தாளர்கள்

[4ம் பக்கம் பார்க்க]

உதைபந்தாட்டம்

## யாழ். பல்கலைக்கழக அணி பாடும் மீன் மோதுகின்றன

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக அணிக்கும் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகத்திற்குமிடையில் சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டி எதிர்வரும் 1ம் திகதி திங்கட்கிழமை யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

1990 ஜூன் மாதம் மட்டக்களப்பில் இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவன் என். கிருபாகரனின் குடும்ப நிதியுதவிக்காக இப் போட்டி நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் சிறந்த போது மேற்படி இரு அணியும் மிகச்சிறந்த அணியாக கணிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (இ)

### ஹெலியின் சிதைவுகள்

(நாவற்குழி)

விடுதலைப் புலிகளினால் வலிகாமில் சுட்டுவீழ்த்தப்பட்ட ஹெலியின் சிதைவுகள் மக்கள் பார்வைக்காக சாவகச்சேரியில் வைக்கப்பட்டது. பெருந்திரளான மக்கள் வந்து பார்வையிட்டுச் சென்றனர். (107)

## ஆயிரம் பிறை கண்ட வித்தகனுர்

விருத்தம்

மட்டுவிற் பதியிற் றோன்றி
வளர்தனங் கிளப்பிற் கோயில்
இட்டமாய்க் கொண்ட ஈசன்
கணபதி எனும்பேர் பெற்றுச்
சிட்டனும் நாவலர் போன்
நிறுவிய கல்விச் சாலை
மட்டிலே படிந்து மேலாம்
வளர்சுவை மாந்தி னாரே!

வேறு

ஆசிரியர்க் காசிரியர் அணிதிருநெல் வேலியிலே
பூசரன்போற் காட்சிதந்த புண்ணியத்தின் முதல்வன்காண்
வீசபுகழ் ஆயிரம்மேல் பிறைகண்ட வித்தகனுர்
காசினியின் கண்மணியாய்க் கலைவளர்த்தனர் காண்போமோ!

\- ஆசிரியமணி ஆ. பஞ்சாட்சரம்

(இன்று பண்டிதமணி அவர்களின் தொண்ணூற்று மூன்றாவது பிறந்ததினம்)

பறவைகள் சரணாலயத்தில்

## மரங்கள் வெட்டவும் மண் அள்ளவும் தடை

(வேலணை)

பண்ணை தாம்போதிக்கு தெற்குப் பக்கமாகவும் அல்லைப்பிட்டி தென்கிழக்குப் பக்கமாக புலிகளால் பிரகடனப் படுத்தப்பட்ட 'ஞாபகார்த்த பறவைகள் சரணாலய'த்தில் தனிப்பட்டவர்கள் அல்லது இயக்க ஆதரவாளர் மரங்களை வெட்டவோ, மண் அள்ளவோ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் தீவக அரசியல் பொறுப்பாளரினால் தடை விதிக்கப்பட்டுள்ளது. தடைகளை மீறி மரங்களை வெட்டி எடுக்கவோ மண்ணை அள்ளி எடுக்கவோ முற்படுவோர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (75)

# கடந்த எட்டு வருடங்களில் கொழும்பில் 10 குண்டுவெடிப்பு

## 600 பேர் வரை பலியாம்!

(கொழும்பு)

கொழும்பில் கடந்த 8 வருடங்களில் 10 குண்டு வெடிப்புகள் இடம்பெற்றுள்ளதாகவும் இதில் 600க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளதாகவும் புள்ளி விபரமொன்று தெரிவித்துள்ளது.

கடந்த வாரம் இடம்பெற்ற குண்டுவெடிப்பு 10வது குண்டுவெடிப்புச் சம்பவமாகுமென்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இத்தாக்குதலில் பெரும்பாலானவை 'தமிழ் அமைப்பு'க்களால் மேற்கொள்ளப்பட்டதாகவும், அவை மிகப் பாரதூரமானவை என்றும் புலனாய்வுத் துறையினர் தெரிவித்தனர்.

கடந்த வாரம் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் கொல்லப்பட்ட பொதுமக்களில் இருவர் பெண்கள். மேலும் இலங்கையின் முக்கிய தனியார் நிறுவனம் ஒன்றின் இயக்குநரும் இதில் கொல்லப்பட்டுள்ளார். (இ)

### வீர மரணம்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் லசாமத்தில் நிலைகொண்டிருந்த சிறிலங்காப் படையினரை எதிர்த்துக் கடந்த 23ந் திகதி இரவு 11 மணிக்கு விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் படையினருக்குப் பலத்த இழப்புக்கள் ஏற்பட்டன.

இம்மோதலில் இரண்டு வீர வேங்கைகள் வீர மரணம் அடைந்தனர்.

திருகோணமலையைச் சேர்ந்த வீர வேங்கைகளான சுரேன், லோஜன் ஆகியோர் வீர மரணம் அடைந்தனர். வீர மரணமடைந்த போராளிகளுக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவிக்கின்றனர். (வ)

### இளம் ஆசிரியை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளார். கடந்த செவ்வாய்க்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தர்மகேணி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் ஆசிரியையாகச் சேவையாற்றும் ஆசிரியை ஒருவரே இவ்வாறு கொலையுண்டவராவார்.

குடியிருப்புக்கள் எதுவுமில்லாத வீதியால் வீடு திரும்பிக்கொண்டிருக்கும்போதே இக்கொலை நடைபெற்றுள்ளது. இவர் அணிந்திருந்த சாதணி, மோதிரம், கைக்கடிகாரம் ஆகியன அப்படியே காணப்பட்டன. சங்கிலி மட்டும் எடுத்துச் செல்லப்பட்டிருந்தது. (53)

### பொதுமக்கள் பாவனைக்கு

(யாழ்ப்பாணம்)

நாவலர் கலாசார மண்டபம், ஜூலை மாதம் முதலாம் திகதியில் இருந்து கலை, பண்பாடு, சமய நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு யாழ். மாநகரசபையால் பொதுமக்களின் பாவனைக்குத் திறந்துவிடப்படவுள்ளது. (153)

### மர்ம வஸ்து வெடித்து சகோதரர்கள் காயம்

(யாழ்ப்பாணம்)

வீட்டு வளவில் இனம் தெரியாத மர்மப் பொருள் ஒன்றினை கண்டெடுத்து விளையாடிக் கொண்டிருந்த இரு சகோதரச் சிறுவர்கள் அப்பொருள் திடீரென வெடித்ததில் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

கொடத்தர்ப்பு வடலியடைப்பைச் சேர்ந்த கந்தசாமி பிரதாபன் [8 வயது] கந்தசாமி பிரதீபன் (10 வயது) ஆகியோரே காயமடைந்தவர்களாவர். (56)

### செனட். மேரிஸ் சாம்பியன்

(யாழ்ப்பாணம்)

யாழ் உதைபந்தாட்ட லீக்கின் தொகுவுப் போட்டிச் சாம்பியன் கிண்ணத்தை, நாவாந்துறை செனட். மேரிஸ் விளையாட்டுக் கழகம் தன் வசமாக்கிக் கொண்டது.

நேற்று நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் செனட். மேரிஸ் கழகம், யாடும்பின் கழகத்தை 1-0 கோல்களால் வெற்றி பெற்றுச் சாம்பியன் கிண்ணத்தைத் தன் வசமாக்கிக்கொண்டது. (வி)

# ஹெலி வீழ்ந்து நொருங்கியது 19 இராணுவ அதிகாரிகள் பலி

(பீஜிங்)

திபெத்தில் ஹெலிகொப்டர் ஒன்று விழுந்து நொருங்கியதில் இரண்டு லெப்டினண்ட் ஜெனரல் உட்பட 19 சீன இராணுவ உயர் அதிகாரிகள் உயிரிழந்தனர்.

இராணுவக் கண்காணிப்பு வேலையில் ஈடுபட்டிருக்கையிலேயே இவ்விபத்து ஏற்பட்டது. கடந்த வாரம் இச்சம்பவம் இடம்பெற்றது.

திபெத் தற்போது சீனாவின் கட்டுப்பாட்டில் இருப்பதும் அங்கு லட்சக்கணக்கான சீனப் படைகள் நிலைகொண்டுள்ளதும் தெரிந்ததே. (பூ)

### க. பொ. த.

(2ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவிக்கையில் விடைத்தாள்கள் திருத்தும் வேலைகளுக்கு கொழும்பில் தற்போது தங்கியுள்ள இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சையில் பங்குபற்றுவதற்குச் சென்ற ஆசிரியர்களும் அங்குள்ள இடம்பெயர்ந்த ஆசிரியர்களும் யாழ்ப்பாணத்திலிருந்து தற்போது செல்லும் ஆசிரியர்களும் பங்கேற்பர். (152)

### ஆறு தமிழ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட குற்றச்சாட்டை அடுத்தே ஹொல்ஸ்ரபிரோ பொலிஸார் இவர்களை கைது செய்தனர்.

டென்மார்க்கில் தற்போது 5,200 இலங்கைத் தமிழர்கள் தஞ்சமடைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (சி)

### சரத் பவார் பாதுகாப்பு அமைச்சர்

(புதுடில்லி)

முன்னாள் மகாராஷ்டிர முதலமைச்சர் திரு. சரத்பவார் இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சராக நேற்று பதவியேற்றுக் கொண்டார்.

பிரதமர் பி. வி. நரசிம்மராவ் உட்பட பல பிரமுகர்கள் இவ்வைபவத்தில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இந்தியாவின் பிரதமர் பதவிக்கு திரு. பி. வி. நரசிம்மராவுடன் போட்டியிட்டு பின்னர் தானாகவே போட்டியிலிருந்து திரு. சரத்பவார் வாபஸாகியதும் இவருக்கு அமைச்சுப் பொறுப்பு வழங்கப்படாமல் காலம் தாழ்த்தப்பட்டு வந்ததும் தெரிந்ததே.

### விசாரணைக் குழு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

னைச் சந்தித்து, கடுகொலைச் சம்பவம் தொடர்பான சகல விபரங்களையும் நேரடியாகக் கிராம மக்களிடமிருந்து ஆணைக்குழு பெற்றுக்கொள்ளும்.

விசாரணைக்காக இன்று மட்டக்களப்பு செல்லும் ஆணைக்குழுவுக்கு விசேட பாதுகாப்பு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

ஆணைக்குழு மட்டக்களப்பு அரசாங்க அதிபரையும் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. விசாரணைகளை முடித்துக்கொண்டு இன்றைய தினமே கொழும்பு திரும்பும் எனவும் அறிவிக்கப்பட்டது.

### சுவிஸ்

[1ம் பக்கத்தொடர்ச்சி]

கள் வாக்குவாதப்பட்டு பின் மோதலில் ஈடுபட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மோதலில் ஈடுபட்டவர்கள் தமிழ் இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (சி)

### உயிர்த்த மனிதர்களின் கூத்து குறியீட்டு நாடகம்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தினரால் 'உயிர்த்த மனிதர்களின் கூத்து' என்ற வெளியீட்டு நாடகம் யாழ் சுண்டுக்குளி மகளிர் பாடசாலையில் நேற்று மாலை நடைபெற்றது.

இந்நாடகத்துக்கு விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திரராசா (மாத்தையா) உட்பட பல விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

இந்நாடகம் பிரபல எழுத்தாளர் க. சிதம்பரநாதனால் எழுதி அரங்கேற்றப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (152-153)

### எமது விரத்தை

(3ம் பக்கத் தொடர்ச்சி)

இன்னுமா அறியவில்லை? இவர்கள் எழுதவில்லையென்றால் நாம் கூட எழுதாமல் விட்டுவிடுவோமா? இல்லை... போராடிக்கொண்டே நாம் எழுதுவோம் இது உறுதி.

### குண்டுவெடிப்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டில் எந்நேரமும், எங்கேயும் எவர் மீதும் தற்கொலைப் படைத் தாக்குதல் நிகழலாமென்று இராணுவ தளபதிகளும் அச்சம் தெரிவித்துள்ளனர்.

அண்மைக்கால இச்சம்பவங்களை அடுத்து இலங்கையிலும், இந்தியாவிலும் பெரும் பீதி ஏற்பட்டுள்ளது. (சி)

### கொழும்பில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யோசனை கூறப்பட்டுள்ளதாம்.

கொழும்பில் அரசுதரப்பிலும், படையினர் மட்டத்திலும் மேற்படி தற்கொலைப் படை தாக்குதலைப் பற்றியே ஆராயப்பட்டும் வருகிறது. (சி)

### புலிகள்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத ஸ்ரீலங்கா இராணுவத்தினர் தமக்கு ஏற்பட்ட பாரிய இழப்புகளுடன் முகாம் திரும்பினர். (க)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

யாழ்ப்பாணக் கிளை.

வைத்தியர் தேவை

நடமாடும் வைத்திய சேவைப் பிரிவில் பணிபுரிய மருத்துவமாணி (எம். பி. பி. எஸ்) உதவி வைத்திய அதிகாரி (ஏ. எம். ஓ), பதிவு வைத்திய அதிகாரி (ஆர். எம். ஓ) தகுதியுடையோர் 06-07-91க்கு முன் விண்ணப்பிக்கவும்.

கௌரவ செயலாளர்
73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(எ-1405)

### கொழும்பு தாக்குதலுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்சித் தலைவியுமான திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கண்டனம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; கடந்த மார்ச் மாதம் 2ம் திகதி கொழும்பில் நடைபெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில் முன்னாள் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரத்ன கொல்லப்பட்ட சம்பவம் மற்றும் இராணுவ கூட்டுப்படைத் தலைமையகம் மீது அண்மையில் நடைபெற்ற குண்டுத்தாக்குதல்கள் யாவும் அரசின் கவனயீனத்தாலேயே ஏற்பட்டதென அவர் குற்றம் சாட்டினார். (அ)

### வடக்கு-கிழக்கு

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தில் இவ்வருடம் மே மாதம் வரை 3,046 படையினர் காயமடைந்துள்ளதாகவும் இதில் 1,000 படையினர் நிரந்தரமாய் ஊனமடைந்தும், 50 படையினர் உடல் அங்கங்கள் முற்றாக செயலிழந்த நிலையிலும், 38 படையினர் இரு கண் பார்வையையும் பூரணமாக இழந்து விட்டதாகவும் கூறினர்.

ஜொனி மிதிவெடி மூலமே பெருமளவு படையினர் தமது கால்களை இழந்துள்ளனர். கண்ணிவெடி குண்டுவெடிப்பு துப்பாக்கிச்சூடு மூலம் காயமடைந்த படையினரே உடலின் சகல பகுதியும் செயலிழந்த நிலையிலுள்ளனர்.

தற்போது படையினருக்கு சிகிச்சையளிக்க போதிய டாக்டர்கள் இல்லை; 3 டாக்டர்கள் ஒரு நாளைக்கு படையினருக்கு 30 சத்திர சிகிச்சையைச் செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது. மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட பல படையினர் சிகிச்சைக்காக தாய்வானுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (இ)

### குண்டு தயாரித்த

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சுற்றி வளைத்து, அவ்வீட்டைச் 'சீல்' வைத்துள்ளனர். கொழும்பு நகருக்கு வெளியே உள்ள இவ்வீடு தொடர்ந்தும் இராணுவத்தின் காவலில் உள்ளது.

இதற்கிடையில் இக்குண்டுத் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட நீலநிற 'இசுசு' வாகன உரிமையாளரையும் பொலிசார் கைது செய்து காவலில் வைத்துள்ளனர்.

இதே வேளையில் கொழும்பு நகரிலும் அதனை அண்டிய பகுதிகளிலுமிருந்து பெருமளவு தமிழ் இளைஞர்கள் தொடர்ந்து கைது செய்யப்பட்டு தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகிறார்கள். (சி-க)

### மத்தியஸ்த

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் மோசமடைந்து வருவது குறித்தும் அவுஸ்திரேலியா அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காணுமாறும் அவுஸ்திரேலியா இலங்கை அரசை வற்புறுத்தியுள்ளது. (இ)

### இலங்கை

[1ம் பக்கத் தொடர்ச்சி]

எதுவித தாக்குதலுக்கும் முன்னறிவிப்பு அத்தாட்சி இல்லையென்ற காரணமாகவே இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. (இ)

### ஷெல் தாக்குதல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மூதாட்டி ஒருவர் உட்பட மூவர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை 4-45 மணியளவில் ஒழாணை தெற்கை நோக்கி ஏவப்பட்ட மூன்று ஷெல்கள் ஒரு வீட்டு வளவில் வீழ்ந்து வெடித்தன.

குப்பிளான் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து வசித்து வந்தவர்களான தாமர் செல்லம் [70 வயது], சிவபாதம் சுரேஸ்குமார் [18 வயது], புவனராசா கேசவன் [20 வயது] ஆகியோரே காயப்பட்டவர்களாவர். (56)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஜூன் மாதம் 27ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post office Sri Lanka under license Number B/160366/81